TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8051811

1. District மாவட்டம் : கடலூர் | PS காவல்நிலையம் : ஊ.த.க. பிரிவு | Year ஆண்டு : 2020 | FIR No மு.த.அ. எண் : 10/2020 | Date நாள் : 13.11.2020

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption (Amendment) Act 2018 — Sections பிரிவுகள்: 7
(ii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
Date from நாள் முதல் : 12.11.2020 18.15 hrs
Date to : நாள் வரை : 12.11.2020 20.30 hrs
Time Period : நேர அளவு
Time from : நேரம் முதல்
Time to : நேரம் வரை

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 12.11.2020
Time : நேரம் 1015 hrs

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Vol - IV
Time : நேரம் 1015 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — கணினி தட்டச்சு

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் — சுமார் ஒரு கி.மீ. தென்மேற்கு

Beat Number : முறைக் காவல் எண்
(b) Address : முகவரி — இணை இயக்குநர், தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் அலுவலகம், கடலூர்

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்
District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் — A. அமுதா
(b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் —
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு
(d) Nationality : நாட்டினம் — இந்தியன்
(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் ———
Place of Issue : வழங்கப்பட்ட இடம் ———
(f) Occupation : தொழில் — உதவி ஆய்வுக்குழு அலுவலர்,
(g) Address : முகவரி — கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கடலூர் மாவட்டம், கடலூர்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

ரா.ரவிச்சந்திரன், இணை இயக்குநர்,
தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம், கடலூர்

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

தாமதமில்லை.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
புலனறிந்து, சமர்ப்பிக்கப்படுகிறது தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்) —

இன்று 13.11.2020 ந்தேதி காலை 10.15 மணிக்கு கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் நான் பணியில் இருந்தபோது, அ.அமுதா, உதவி ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டம், கடலூர் மாவட்ட ஆட்சியரகம், கடலூர் என்பவர் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று கீழ்க்கண்டவாறு வழக்கு பதிவு செய்யப்பட்டது. புகாரின் விவரம் பின்வருமாறு; நாள் : 13.11.2020 அனுப்புநர் அ. அமுதா, உதவி ஆய்வுக்குழு அலுவலர், கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கடலூர் மாவட்டம், கடலூர். பெறுநர் காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கடலூர். அய்யா, பொருள் : திடீர் ஆய்வு சோதனை – தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் – இணை இயக்குநர், தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் அலுவலகம், கடலூர் – திடீர் ஆய்வு சோதனை – உரிய சரியான முகாந்திரம் இன்றி பெறப்பட்ட இனிப்புகள் மற்றும் கைப்பற்றப்பட்ட ரொக்கப்பணம் – திடீர் ஆய்வு

(தொடர்ச்சி பக்கம் -3)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

13/11/20

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

13/11/2020

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
13.11.2020

Name: பெயர் E.S.J. MELWYN RAJASINGH
Rank: நிலை DSP ............No. எண் ..........
VBAC, CUDDALORE

மகஜரில் கைப்பற்றுதல் – ஒப்படைப்பு – நடவடிக்கை எடுக்க வேண்டி புகார் மனு சமர்ப்பித்தல் – சம்மந்தமாக. கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அலுவலகம், கடலூர் (இருப்பு) உதவி ஆய்வுக்குழு அலுவலரான அ.அமுதா ஆகிய நான் 12.11.2020 ஆம் தேதி மதியம் சுமார் 02.00 மணிக்கு எனது அலுவலகத்தில் இருக்கும்போது எனக்கு கிடைத்த தகவலின்படி கடலூர் மாவட்டம், கடலூர், செம்மண்டலம், தௌலத் நகரில் உள்ள துணை இயக்குநர் மற்றும் இணை இயக்குநர், தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் அலுவலகம் இயங்கி வருவதாகவும், இவ்வலுவலகத்திற்கு, வருகிற தீபாவளி திருநாளை முன்னிட்டு மாவட்டத்தில் உள்ள தொழிற்சாலைகள் மற்றும் இவ்வலுவலக கட்டுப்பாட்டில் உள்ள இதர தொழில் சம்மந்தமான நிறுவனங்கள், அலுவலகங்கள், அமைப்புகள் ஆகியவற்றிலிருந்து பரிசு பொருட்கள், பணம், இனிப்பு வகைகள், பட்டாசு பாக்கெட்டுகள், இன்ன பிற பரிசு பொருட்கள் கொடுத்து வருவதாக தகவல் கிடைக்கப்பெற்றது. மேற்படி கிடைக்கப்பெற்ற ரகசிய தகவலை நான், உடனடியாக கடலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு அருகே இருக்கும் கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு 12.11.2020 ந்தேதி மாலை சுமார் 02.30 மணிக்கு சென்று அங்கு பணியில் இருந்த காவல் துணைக் கண்காணிப்பாளர் திரு.E.S.J.மெல்வின் ராஜசிங் அவர்களிடம் எனக்கு கிடைத்த ரகசிய தகவலை தெரிவித்தேன். மேலும் எனது தலைமையில் மேற்சொன்ன அலுவலகத்தில் திடீர் ஆய்வு மேற்கொள்ள இருப்பதையும் தெரிவித்து, திடீர் ஆய்வுக்கு உதவியாக இருக்க வேண்டியும் கேட்டுக்கொண்டேன். அதன்படி காவல் துணைக் கண்காணிப்பாளர் அவர்கள் அவரது அலுவலகத்தில் இருந்த காவல் அலுவலர்கள் மற்றும் ஆளிநர்களை தயார் நிலையில் இருக்க சொல்லி உத்தரவிட்டார். பின்னர் நானும், காவல் துணைக் கண்காணிப்பாளர் திரு.E.S.J.மெல்வின் ராஜசிங் மற்றும் அவரது காவல் குழுவினர்களும் மாலை சுமார் 03.30 மணிக்கு இரண்டு அரசு வாகனங்களில் மேற்சொன்ன அலுவலகத்திற்கு புறப்பட்டோம். மேற்சொன்ன அலுவலகமானது கிழக்கு மேற்காக செல்லும் கடலூர் – பண்ருட்டி சாலையின் வடபுறமாக திரும்பி தௌலத் நகரில் இடதுபுறமாக இரண்டாவது குறுக்கு தெருவில் எண்.53/13 என்ற எண்ணில் உள்ள துணை இயக்குநர் மற்றும் இணை இயக்குநர், தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் அலுவலகத்திற்கு சற்று தொலைவில் எங்களது வாகனங்களை நிறுத்தி பிறகு சிறிது நேரம் கண்காணித்து, பின்னர் மாலை சுமார் 03.50 மணிக்கு வந்து சேர்ந்தோம். அலுவலகமானது தரை தளம் மற்றும் முதல் தளத்துடன் கூடிய சிமெண்ட் கான்கிரீட் கட்டிடத்தால் அமைக்கப்பட்டிருந்தது. தரை தள அலுவலக முகப்பில் துணை இயக்குநர், தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம், கடலூர் என்று 3 X 4 அடி அளவுள்ள இரும்பு தகர ஷீட்டில் பெயிண்டால் தமிழில் எழுதப்பட்டிருந்தது. அந்த

அலுவலகத்தின் முதல் தள அலுவலக முகப்பில் இணை இயக்குநர், தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம், கடலூர் என்று 3 X 4 அடி அளவுள்ள இரும்பு தகர ஷீட்டில் பெயிண்டால் தமிழில் எழுதப்பட்டிருந்தது. எனவே முதல் தளத்திற்கு திடீர் சோதனை செய்ய வேண்டியுள்ளதால், எனது வேண்டுகோளை காவல் துணைக் கண்காணிப்பாளர் அவர்களிடம் தெரிவித்து, காவலர்களை பாதுகாப்பு பணிக்கு முதல் தளத்திற்கு நியமிக்கப்பட்டது. பின்னர், தரை தளத்தில் உள்ள துணை இயக்குநர், தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் அலுவலகத்தில் 12.11.2020ந்தேதி மாலை 16.00 மணி முதல் இரவு 18.00 மணி வரை திடீர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அதன் பின்னர் இவ்வலுவலக கட்டிடத்தின் முதல் தளத்தில் இயங்கக்கூடிய இணை இயக்குநர், தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார துறை அலுவலகத்தினை சோதனை செய்வதற்காக 18.15 மணிக்கு முதல் தளத்தில் அலுவலகத்தினுள் நுழைந்தவுடன் நுழைவாயிலை அடுத்து ஹால் (25X15 அடி அளவுள்ளது) உள்ளது. அந்த ஹாலில் அலுவலலில் இருந்த பெண் அலுவலரிடம், என்னையும், உடன் வந்த காவல் துணைக் கண்காணிப்பாளர் திரு.E.S.J.மெல்வின் ராஜசிங் மற்றும் ஆய்வு குழுவினர் அனைவரது அடையாள அட்டையை காண்பித்து அறிமுகம் செய்து வைத்தேன். பின்னர் அவரை பற்றி விசாரித்தபோது தனது பெயர் செல்வி, வயது 48/2020 க/பெ மாணிக்கவாசகம், 18/D,குருவப்பன் தெரு, புதுப்பாளையம், கடலூர் என்றும், இவ்வலுவலகத்தில் C பிரிவின் உதவியாளராக பணியாற்றுவதாக கூறினார். மேலும் அலுவலகத்தில் இருந்த மற்றொரு அலுவலரை விசாரிக்க தனது பெயர் N.பரணிதரன் வயது 34/2020 த/பெ நரசிம்மன், 54,ஔவையார் தெரு, செம்மண்டலம், கடலூர் என்றும் இவ்வலுவலகத்தில் B பிரிவின் உதவியாளராக பணியாற்றுவதாக கூறினார். மேலும் அலுவலகத்தில் இருந்த மற்றொரு நபரை விசாரிக்க தனது பெயர் R.N.அரவிந்த், வயது 22/2020 த/பெ நாகராஜன், 14A,அனந்தீஸ்ரவன் கோவில் தெரு, சிதம்பரம் என்றும் இவ்வலுவலகத்தில் E பிரிவின் இளநிலை உதவியாளராக பணியாற்றுவதாக கூறினார். இவர்களில் சீனியரான உதவியாளர் செல்வி அவர்களை விசாரிக்க இவ்வலுவலகத்தின் இணை இயக்குநர் அவர்கள் நெய்வேலி NLC ல் நடைபெறும் தொழிலாளர் பாதுகாப்பு தொடர்பாக பயிற்சி வகுப்பு எடுப்பதற்காக சென்றுள்ளதாகவும், இவ்வலுவலக அனைத்து பிரிவின் கண்காணிப்பாளராக பணிபுரியும் சசிகலா என்பவர் 12.11.2020 தற்செயல் விடுப்பில் உள்ளதாகவும் தெரிவித்தார். பின்னர் அவர் முன்னிலையில் அலுவலகத்தை சோதனையிட போவதாக தெரிவித்தேன். அதற்கு அவர் ஆட்சேபனை இல்லை என தெரிவித்தார். அந்த ஹாலில் மரத்திலான மேஜைகள் இருந்தன. மேஜையின் மீது அலுவலக கோப்புகள் அடிக்கி வைக்கப்பட்டிருந்தன. மேலும் ஹாலின் வடக்குபுறத்தில்

மரத்திலான பீரோ இருந்தது. அப்பீரோவை சோதனை செய்த போது, அதில் கோப்புகள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. அவ்கோப்புகளின் அடியில் பணம் மறைத்து வைக்கப்பட்டிருந்து. மேற்படி பணத்தை எண்ணிப்பார்க்க 500 x 35, 200 x 6, 100 x 20, 50 x 8, 20 x 11, 10 x 25 ஆக மொத்தம் ரூ.21,570/– பணம் இருந்தது. மேற்சொன்ன பணம் சம்மந்தமாக என்னுடன் இருந்த உதவியாளர் செல்வி அவர்களிடம் பணம் பற்றி விவரம் கேட்க, இந்த பணம் இந்த இடத்தில் எப்படி வந்தது என தெரியாது என தெரிவித்தார். மேற்படி ஹாலிற்கு மேற்கு புறம் ஒரு அறை இருந்தது. அவ்வறையானது 15X12 அடி அளவுள்ளது, அறையில் 3X5 அடி அளவுள்ள மர டேபிள் மற்றும் அதன் மேல் அலுவலக கோப்புகள் அடுக்கி வைக்கப்பட்டுள்ளது. எதிரே இருக்கை காணப்பட்டது. இருக்கையின் வலது புறத்தில் Dell Computer CPU, Monitor இருந்தது. இந்த இருக்கையின் அலுவலரை பற்றி விசாரிக்க இணை இயக்குநர் அறை என தெரிவித்தார். அறையின் வடக்கு புறத்தில் சிமெண்டிலான கப்போர்டு இருந்தது. அதில் ஆவணங்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. அதனை சோதனை செய்த போது, அந்த ஆவணங்களுக்கிடையே பணம் மறைத்து வைக்கப்பட்டிருந்து. மேற்படி பணத்தை எண்ணிப்பார்க்க 2000 x 2, 500 x 56, 100 x 4, 10 x 4 ஆக மொத்தம் ரூ.32,440/– பணம் இருந்தது. மேற்சொன்ன பணம் சம்மந்தமாக என்னுடன் இருந்த உதவியாளர் அவர்களிடம் பணம் பற்றி விவரம் கேட்க, இந்த பணம் இந்த இடத்தில் எப்படி வந்தது என தெரியாது என தெரிவித்தார். இவ்வறையில் சிமெண்ட் கப்போர்டிற்கு எதிரே தரையில் தீபாவளி திருநாளை முன்னிட்டு இனிப்பு வகைகள் மற்றும் பட்டாசு பாக்ஸ்கள் பெறப்பட்டு, அடுக்கி வைக்கப்பட்டிருந்தது. அதன் விவரம் கீழ்க்கண்டவாறு பதியப்படுகிறது.

| வ.எண் | பொருளின் விவரம் | எடை | விலை |
|---|---|---|---|
| 1. | NANDHINIEE SWEETS, | 500 கிராம் – 6 Boxes (3 கி.கிராம்) | ரூ.1,200/– |
| 2. | ABIRAMI SWEETS | 1 கி – 1 Box | ரூ.500/– |
| 3. | ABIRAM DRY NUTS | 1 Box | ரூ.450/– |
| 4. | AGARWAL SWEETS | 500 கிராம் – 4 Boxes (2 கி.கிராம்) | ரூ.800/– |
| 5. | NEW GUPTA BAVAN | 500 கிராம் – 10 Boxes (5 கி.கிராம்) | ரூ.2,000/– |
| 6. | ADHIRA SWEETS | 500 கிராம் – 8 Boxes (4 கி.கிராம்) | ரூ.2,400/– |
| 7. | A2B SWEETS | 1 கி.கிராம் – 1 Box | ரூ.1,400/– |

| | | | |
|---|---|---|---|
| | | 500 கிராம் – 5 Boxes (2.5 கி.கிராம்) | |
| 8. | FIRE CRACKERS BOXES | Big size – 4<br>Small – 5 | ரூ.2,450/– |
| 9. | HALDIRAMS SWEETS. | 500 கிராம் – 9 Boxes (4.5 கி.கிராம்) | ரூ.2,700/– |
| 10. | AAVIN GHEE & SWEETS | **Ghee** 500 கிராம் – 5 Bottle,<br>**Sweet** 250 கிராம் – 6 Boxes (1.5 கி.கிராம்) | ரூ.2,000/– |
| 11. | THIRUMALA GHEE & SWEETS | **Ghee** 500 கிராம் – 7 Bottle,<br>**Sweet** 500 கிராம் – 1 Box<br>250 கிராம் – 6 Boxes (2 கி.கிராம்) | ரூ.2000/– |

மேற்படி இணை இயக்குநர் அறைக்கு வடக்கு புறம் ஹாலுடன் இணைந்தார் போல் வடக்குபுறத்தில் இருந்த கணினி அறை 10X12 அடி அளவுள்ளது, அவ்வறையில் வடக்கு பார்த்தார் போல் ஒரு ஸ்டில் பீரோ இருந்தது, அதில் பழைய ஆவண கோப்புகள் அடிக்கி வைக்கப்பட்டுள்ளது. வலது புறத்தில் Computer CPU, Monitor இருந்தது. மேலும் இடது புறத்திலும் Computer CPU, Monitor இருந்தது. மேலும் வடபுறத்தில் சிமெண்டிலான கப்போர்டு இருந்தது. அதில் கோப்புகள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. அவ்கோப்புகளின் அடியில் பணம் மறைத்து வைக்கப்பட்டிருந்து. மேற்படி பணத்தை எண்ணிப்பார்க்க 500 x 5, 100 x 8, 50 x 6, 20 x 2, 10 x 7 ஆக மொத்தம் ரூ.3,710/– பணம் இருந்தது. மேற்சொன்ன பணம் சம்மந்தமாக என்னுடன் இருந்த உதவியாளர் செல்வி அவர்களிடம் பணம் பற்றி விவரம் கேட்க, இந்த பணம் இந்த இடத்தில் எப்படி வந்தது என தெரியாது என தெரிவித்தார். பின்னர் ஹாலிற்கு வடக்கு புறம் இருந்த வராண்டா 10 X 18 அடி அளவுள்ளது, இவ்வராண்டாவின் கிழக்கு புறத்தில் கிழக்கு புறமாக அமைந்துள்ள குளியலறை (3 X 3 அடி அளவுள்ளது) மற்றும் கழிவறையை (3 X 3 அடி அளவுள்ளது) அமைந்துள்ளது. இவ்வராண்டாவில் மேற்கு புறத்தில் சிமெண்டிலான கப்போர்டு இருந்தது. அதில் அலுவலக பயன்பாட்டில் இல்லாத பழைய பொருட்கள் மற்றும் பழைய கோப்புகள் அடிக்கி வைக்கப்பட்டிருந்தன. மேற்சொன்ன

ஆய்வின்போது கணக்கில் வராத, உதவியாளர் செல்வி அவர்கள் உரிய காரணம் தெரிவிக்காத பணம் ரூ.57,720/– மற்றும் இணை இயக்குநர் அலுவலகம் வருகை பதிவேடு – 2020 ஆகியவை மேல்விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இந்த நிகழ்வுகள் தொடர்பாக திடீர் ஆய்வு மகஜர் மாலை 18.15 மணி முதல் இரவு 20.30 மணிக்கு முடிக்கப்பட்டது. மேலும் சோதனையின் போது என்னாலோ, என்னுடன் வந்த கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு காவல் துணை கண்காணிப்பாளர் மற்றும் அவர்களது குழுவினராலோ மேற்படி அலுவலகத்தில் எனது தலைமையில் ஆய்வு குழு சோதனை செய்த போது எந்தவித ஆவணங்களையோ, பொருட்களையோ சேதப்படுத்தவில்லை. மேலும் எங்களது மேற்படி ஆய்வின் போது அலுவலகத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்கு மன உளைச்சலை ஏற்படுத்தும் வகையில் நடந்து கொள்ளவில்லை. இன்று 13.11.2020ந் தேதி காலை 10.15 மணிக்கு கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் நேரில் வந்து, 12.11.2020ந்தேதி இணை இயக்குநர், தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் அலுவலகத்தில், மேற்படி திடீர் ஆய்வு சம்மந்தமாக இணை இயக்குநர் திரு.ரா.ரவிச்சந்திரன் என்பவருக்கு எதிராக சட்டப்பூர்வ நடவடிக்கை எடுக்க வேண்டி, திடீர் ஆய்வின்போது தயார் செய்யப்பட்ட அசல் திடீர் ஆய்வு மகஜர், ஆய்வின்போது கைப்பற்றப்பட்ட பணம் ரூ.57,720/– மற்றும் திடீர் ஆய்வு மகஜர் மூலம் கைப்பற்றப்பட்ட ஆவணத்தை இத்துடன் இணைத்து உரிய நடவடிக்கைக்காக ஒப்படைக்கப்படுகிறது. மேலும் இது சம்மந்தமாக பதிவு செய்யும் வழக்கின் விவரம் பின்னர் தெரியப்படுத்துமாறும் இதன் மூலம் கேட்டுக்கொள்கிறேன். தங்கள் உண்மையுள்ள (ஒப்பம்) (அ. அமுதா) உதவி ஆய்வுக்குழு அலுவலர், கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கடலூர் மாவட்டம், கடலூர். அய்யா, நான் இன்று 13.11.2020 பகல் 10.15 மணிக்கு மேலே கண்ட புகார் மனுவை பெற்று, கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.10/2020, சட்டபிரிவு 7 ஊழல் தடுப்பு (திருத்தியமைக்கப்பட்ட) சட்டம் 2018 படி வழக்கு பதிவு செய்யப்பட்டது. இதன் அசலை, வாதியின் புகார் மனுவுடன் இணைத்து, கணம் தலைமை நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, கடலூர் அவர்களுக்கும், இதர நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

13/11/2020

Deputy Supdt. of Police
Vigilance and Anti-Corruption
Cuddalore.